இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DIGITAL SKILLS for LIFE

# இணைய வர்த்தகம்




கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து இணையவழிப் பரிவர்த்தனைகளை கற்றுக்கொள்ள முடியும்

GO gov.sg

இதற்கான ஆதரவு
DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD

SMART NATION SINGAPORE

# உள்ளடக்கம்


முகப்புரை 2

சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் 3

பொதுவான இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் புரிந்துகொள்ளுதல் 5

இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் பயன்படுத்துவதன் பொதுவான படிகளுக்கு இட்டுச் செல்லுதல் 8

இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான படிப்படியான வழிகாட்டுதல்கள் - Shopee செயலி 16

இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான படிப்படியான வழிகாட்டுதல்கள் - FairPrice Group செயலி 44




# முகப்புரை

வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்கள் (DSL) வழிகாட்டிப் புத்தகம் என்பது தினசரி வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொள்ள உதவும் சிற்றேடுகளின் தொகுப்பாகும். இது, டிஜிட்டல் உலகில் நீங்கள் நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்காக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியபடிப்படியான வழிமுறைகள் மற்றும் விரைவான உதவிக்குறிப்புகளைப் பற்றி விளக்குகிறது.

தினசரி வாழ்க்கைக்குத் தேவைப்படும் டிஜிட்டல் திறன்களை கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்காகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த DSL திறன்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி 5 திறன்களைக் கொண்ட பகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

**கற்றல் விளைவுகள்:**

இந்த வழிகாட்டிக் கையேடு 'இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்' திறன் மீது கவனம் செலுத்துகின்றது, இதில் நீங்கள் கற்றுக்கொள்வது:

- பொதுவான இணையவழி ஷாப்பிங் செயலிகள், அதன் ஐகான்கள் மற்றும் அவற்றின் சின்னங்களைப் பயன்படுத்தி அவற்றை அடையாளம் கண்டறிதல்.
- பொருள்களை இணையவழியில் வாங்குவதற்கான பொதுவான அம்சங்கள் (UI) மற்றும் பொதுவான படிகள் (UX) மற்றும் பல்வேறு இணையவழி ஷாப்பிங் செயலிகளில் அதன் அமைப்புகளை நிர்வகித்தல்.
- இணையதளத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கான பயனுள்ள இணையவழிப் பாதுகாப்புக் குறிப்புகள்.

நீங்கள் கற்றல் பயனைப் பெறுவதற்கு உதவும் வகையில், இந்த வழிகாட்டி கையேடு இணைய வர்த்தகம் செய்வதற்கான பொதுவான படிகளை விளக்குவதற்கு வெவ்வேறு இணைய வர்த்தக செயலிகளை எடுத்துக்காட்டுகளாகப் பயன்படுத்துகிறது.

DSL





**இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாக, கனிவாக இருத்தல்**
இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாப்பாக இருங்கள்; தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; இணையத்தில் நேர்மறையாக இருக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**தகவல்களை இணையவழித் தளங்களில் ஆராய்தல்**
இணையத்தில் தகவல்களைத் தேடவும், பார்க்கவும் மற்றும் மீட்டெடுக்கவும்.



**இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல்**
இணையத்தில் மற்றவர்களுடன் இணையவும்.



**இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்**
இணையத்தில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும்.



**அறிவார்ந்த சாதனங்களை நிறுவி, பயன்படுத்துதல்**
உங்கள் மொபைல் சாதனத்தின் அடிப்படை வன்பொருள் மற்றும் மென்பொருள் செயல்பாடுகளை அமைத்து இயக்கவும்.



இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளின் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்

இணைய வர்த்தக செயலிகளில் உலாவும்போது பாதுகாப்பாக இருக்க, பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்கவும்:




**சந்தேகத்திற்கிடமான அழைப்புகள் அல்லது செய்திகளை**, அரசு/வணிகத்தின் அதிகாரப்பூர்வ தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலம் **சரிபார்க்கவும்** அல்லது அவற்றின் அதிகாரப்பூர்வ செயலி/இணையதளம் வழியாக நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். அழைப்பு அல்லது செய்தியில் வழங்கப்பட்ட தொடர்பு விவரங்கள் மூலம் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள வேண்டாம்.




தனிப்பட்ட அல்லது நிதி தொடர்பான விவரங்கள், கடவுச்சொற்கள் அல்லது ஒரு முறை கடவுச்சொல்லை (OTPஐ) யாருடனும் பகிர்ந்து கொள்ள **வேண்டாம்.**




அரசாங்கத்திடமிருந்து அல்லது நம்பகமான வணிகத்திலிருந்து வந்திருப்பதைப் போல குறிப்பிடப்பட்டிருக்கும் **செய்திகள் அல்லது மின்னஞ்சல்களில் உள்ள இணைப்புகளை** நீங்கள் பெறும்போது அவற்றைக் **கிளிக் செய்ய வேண்டாம்**.




**2-காரணி அங்கீகாரம், குறுஞ்செய்தி/மின்னஞ்சல் அறிவிப்பு விழிப்பூட்டல்களை அமைத்து**, உங்கள் வங்கிப் பரிவர்த்தனைகளுக்கு செயலியில் மேல் வரும் அறிவிப்பை அனுமதிக்கவும், இதன் மூலம் சந்தேகத்திற்குரிய எந்தச் செயல்பாட்டையும் உங்களால் கண்காணிக்க முடியும்.




பாதுகாப்பு தொடர்பாக அறியப்பட்ட பாதிப்புகளில் இருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாத்துக் கொள்ள, **உங்கள் செயலியை சரியான நேரத்தில் புதுப்பிக்கவும்**.




அதிகாரப்பூர்வ பணமளிப்பு முறைகள், விநியோகத்தின் போது பணம் கொடுப்பது அல்லது பொருட்கள் வாங்கும் தளத்தின் ஊடாக பணமளிப்பது ஆகியவற்றை வலியுறுத்துங்கள். இந்த முறைகளில், நீங்கள் உங்கள் பொருட்களைப் பெற்ற பிறகு மட்டுமே விற்பனையாளர்




**அதிகாரப்பூர்வ** ஆதாரங்களில் இருந்து செயலிகளைப் பதிவிறக்கம் செய்யவும்.




எப்பொழுதும் கவனமாக இருங்கள், சலுகைகள் மிகையாக நன்றாக இருந்தால் அதனை வாங்குவது பற்றி மறுபரிசீலனை செய்யுங்கள், குறிப்பாக கவர்ச்சிகரமான சலுகைகள் அல்லது கையேடுகளுக்கு ஈடாக தனிப்பட்ட தகவல்களைக் கோரும் இணையதளங்கள் குறித்து கவனமாக இருங்கள்.

# பொதுவான இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் புரிந்துகொள்ளுதல்

இணையவழி ஷாப்பிங் செயலிகள் மற்றும் அதன் சின்னங்கள் பற்றி பக்கம் 6

பல்வேறு இணையவழி ஷாப்பிங் செயலிகளில் காணப்படும் பொதுவான அம்சங்கள் பக்கம் 7


# இணைய வர்த்தக செயலிகள் பற்றிய விளக்கம்

மின்னிலக்க கட்டண முறையைப் பயன்படுத்தி பொருட்களை வாங்கவும், அவற்றை உங்கள் வீட்டு வாசலிலே கொண்டு வர உதவும் ஒரு-நிறுத்த வர்த்தக செயலி.

## செயலியைக் கற்றுக்கொள்வதற்கு முன்பு தேவையானவை

## கற்பவரிடம் பின்வருபவை கண்டிப்பாக இருக்க வேண்டும்:

- மொபைல் சாதனம்(iOS அல்லது Android) இருக்க வேண்டும், அது செல்லுலார் நெட்வொர்க் அல்லது Wi-Fi உடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- செல்லுலார் நெட்வொர்க் அல்லது Wi-Fi உடன் இணைப்பது எப்படி என்பதை அறிந்திருக்க வேண்டும்.
- மொபைல் சாதனத்தில் செயலியை எவ்வாறு நிறுவுவது என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டும்.
- மின்னிலக்க சேவைகளை அணுக Singpass ஐ எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்திருக்க வேண்டும்.
- கடன் அட்டை அல்லது பற்று அட்டையைச் சொந்தமாக வைத்திருக்க வேண்டும் (FairPrice செயலி கடன் அட்டை அல்லது பற்று அட்டை வழியாக மட்டுமே மின்-பணமளிப்புகளை ஏற்கும்).




Shopee




FairPrice

# இணைய வர்த்தக செயலி உள்ள பொதுவான அம்சங்கள்


**Shopee** | **FairPrice**






**முகப்பு சின்னம்**
செயலியின் முதன்மை முகப்புப் பக்கத்தை அணுகுவதற்கு.





**கணக்கு சின்னம்**
உங்கள் கணக்கு பற்றிய தகவல்களை அணுக.





**அமைப்புகள் அல்லது கூடுதல் சின்னம்**
உங்கள் செயலியின் அமைப்புகளை அறிவிப்பு அமைப்புகள் மாற்றுவதற்கு.





**வண்டி (Shopping Cart) சின்னம்**
நீங்கள் பணம் செலுத்தும் முன் உங்கள் வண்டியில் உள்ள பொருட்களைப் பார்க்க.






**தேடல் பட்டி**
நீங்கள் வாங்க விரும்பும் பொருட்களைத் தேட.


# இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் பயன்படுத்துவதன் பொதுவான படிகளுக்கு இட்டுச் செல்லுதல்



| | |
|---|---|
| ஒரு கணக்கை அமைப்பது எப்படி | பக்கம் 9 |
| பொருள்களைத் தேடுதல், கூடையில் சேர்த்தல், வாங்குதலை முடித்தல் ஆகியவற்றை மேற்கொள்வது எப்படி | பக்கம் 10 |
| பணம் செலுத்தும் முறை மற்றும் விநியோக விருப்புரிமைகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி | பக்கம் 13 |
| உங்கள் பரிவர்த்தனை வரலாற்றைப் பரிசோதிப்பது எப்படி | பக்கம் 14 |
| உங்கள் கணக்கிலிருந்து வெளியேறுவது எப்படி | பக்கம் 15 |

# இணைய வர்த்தக செயலிகளுக்குள் உள்நுழைய அல்லது கணக்கைப் பதிவு செய்வதற்கான பொதுவான படிகள்


**கணக்கை அமைக்க “Account” சின்னத்தைத் தட்டி, “Sign Up” என்பதைத் தட்டவும்.**


## Shopee




## NTUC FairPrice





# இணைய வர்த்தக செயலியில் ஒரு பொருளைத் தேடுவதற்கானப் பொதுவான படிகள்

தேடல் பட்டி மீது தட்டி நீங்கள் தேட விரும்பும் பொருளின் பெயரை உள்ளிடவும்.

## Shopee





## NTUC FairPrice




# இணைய வர்த்தக செயலியில் ஒரு பொருளை வண்டியில் சேர்க்க பொதுவான படிகள்

**நீங்கள் விரும்பும் ஒரு பொருளைத் தட்டி, அதைக் வண்டியில் சேர்க்கவும்.**

### Shopee




### NTUC FairPrice




# இணைய வர்த்தக செயலியின் வண்டியில் சேர்க்கப்பட்ட பொருட்களைத் திருத்துவதற்கான பொதுவான படிகள்


**உங்கள் வண்டியை மறுஆய்வு செய்து திருத்த "Cart" என்ற சின்னத்தைத் தட்டவும்.**


## Shopee




## NTUC FairPrice








# இணைய வர்த்தக செயலியின் வண்டியியை "Check Out" செய்ய பொதுவான படிகள்


நீங்கள் விரும்பும் பொருட்களைத் தேர்ந்தெடுத்து, "Check Out" என்பதைத் தட்டவும்.


## Shopee




## NTUC FairPrice





# இணைய வர்த்தக செயலியில் பணம் செலுத்துவதற்கான பொதுவான படிகள்

**பொருட்களை வாங்குவதற்கு முன் உங்கள் தயாரிப்பு, விநியோக முகவரி, பணம் செலுத்தும் முறை மற்றும் விநியோக தேதி/நேரத்தை மறு ஆய்வு செய்யவும்.**

## Shopee





## NTUC FairPrice




# இணைய வர்த்தக செயலிகளிலிருந்து வெளியேறுவதற்கானப் பொதுவான படிகள்

**வெளியேறுவதற்கு உங்கள் கணக்கு அமைப்புகளுக்குச் செல்லவும்.**

## Shopee




## NTUC FairPrice




# இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான படிப்படியான வழிகாட்டுதல்கள்


| | |
|---|---|
| **Shopee செயலி** | **பக்கம் 17** |
| FairPrice Group செயலி | பக்கம் 45 |


# Shopee கணக்கை அமைத்தல்

## 1 Me என்ற பிரிவைத் தட்டவும்





Shopee செயலியில் "**Me**" என்ற பிரிவுக்குச் செல்லவும்.

## 2 Sign Up என்பதைத் தட்டவும்





"**Sign Up**" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

## 3 தொலைபேசி எண்ணை உள்ளிடவும்




## 4 சரிபார்ப்புக் குறியீட்டைக் கொண்டு கணக்கைச் சரிபார்க்கவும்

A





**"Other Methods"** என்பதைத் தட்டி, **"தொலைபேசி அழைப்புகள்"** அல்லது **"எஸ்எம்எஸ்"** வாயிலாக கணக்கைச் சரிபார்க்கலாம்.

B




பெற்ற சரிபார்ப்புக் குறியீட்டை பயனர் உள்ளிட வேண்டும், பின்னர் **"Next"** என்பதைத் தட்டவும்.


C





வலுவான கடவுச்சொல்லை அமைத்து, **"Sign Up"** என்பதைத் தட்டவும்.

# Shopee உள்நுழைவு முறைகள் - கடவுச்சொல் வாயிலாக


1. Me என்ற பிரிவைத் தட்டவும்




2. Log In என்பதைத் தட்டவும்





3. பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல்லை உள்ளிடவும்




நீங்கள் பதிவு செய்யப் பயன்படுத்திய உங்கள் தொலைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தியும் உள்நுழையலாம்.


**4** **Log In என்பதைத் தட்டவும்**





# குறிப்புகள்

# Shopee உள்நுழைவு முறைகள் - எஸ்எம்எஸ் வாயிலாக


1 Me என்ற பிரிவைத் தட்டவும்





2 Log In என்பதைத் தட்டவும்





3 Log In with SMS என்பதைத் தட்டவும்




## 4 தொலைபேசி எண்ணை உள்ளிடவும்




## 5 சரிபார்ப்புக் குறியீட்டை உள்ளிடவும்




## 6 வெற்றிகரமான உள்நுழைவு




# அறிவிப்புகளை நிர்வகித்தல்

**1** Me என்ற பிரிவைத் தட்டவும்





Shopee செயலி வாயிலாக **"Me"** என்ற பிரிவுக்குச் செல்லவும்.


**2** அமைப்புகள் என்பதைத் தட்டவும்





**3** Notification Settings என்பதைத் தேர்ந்தெடுக்கவும்



**4** **Push Notifications என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**





**5** **அறிவிப்பு அமைப்புகளைத் தனிப்பயனாக்குங்கள்**





**"Push Notifications"** இயக்க/முடக்க நிலை மாற்றிகளைப் பயன்படுத்தவும், **"அறிவிப்பு ஒலி"**, **"ரிங்டோன்"** மற்றும் பெறவிருக்கும் அறிவிப்புகளின் வகைகளைத் தனிப்பயனாக்கவும்.

# விநியோக முகவரியைச் சேர்த்தல்


1 Me என்ற பிரிவின் மீது தட்டவும்





2 அமைப்புகள் என்பதன் மீது தட்டவும்





3 My Addresses என்பதன் மீது தட்டவும்



## 4 Add a new address என்பதன் மீது தட்டவும்





## 5 உங்கள் விநியோக முகவரியைப் பூர்த்தி செய்யவும்





உங்கள் விநியோக முகவரியைச் சேமிக்க **"SUBMIT"** என்பதைத் தட்டவும்.

# பொருளைத் தேடுதல் - முக்கியச்சொல் தேடல்


**1** தேடல் பட்டியின் மீது தட்டவும்




**2** முக்கியச்சொல்லை (சொற்களை) உள்ளிடவும்





**3** முடிவுகளில் தேடவும்





உங்கள் விருப்பத்தின் அடிப்படையில் தேடல் முடிவை வரிசைப்படுத்தவும் (பொருத்தம், சமீபத்தியது, அதிகம் விற்பனையாவது, விலை).

## 4 Filter என்பதைத் தட்டவும்




மேலும் குறிப்பிட்ட அளவுகோல்களுக்கு **"Filter"** செய்யவும்.


## 5 Filter விருப்பங்கள்




உங்கள் தேடல் முடிவுகளைச் சுருக்குவதற்கு நீங்கள் விரும்பும் Filter களைத் தேர்ந்தெடுக்கவும்.

# பொருளைத் தேடுதல் - படத் தேடல்


1 புகைப்படக்கருவி சின்னம் மீது தட்டவும்




2 பொருளை புகைப்படமெடுக்கவும்





3 தொடர்புடைய பொருளைத் தேடிப்பார்க்கவும்




# வண்டியைத் திருத்துதல் - பொருளின் எண்ணிக்கையை அதிகரித்தல்


**1** வண்டியின் மீது தட்டவும்




**2** பொருளைத் தேர்ந்தெடுக்கவும்





**3** எண்ணிக்கையை அதிகரிக்கவும்




எண்ணிக்கையை அதிகரிக்க “+” சின்னத்தைத் தட்டவும்.


# வண்டியைத் திருத்துதல் - வண்டியில் இருந்து பொருளை அகற்றுதல்

**1** வண்டியின் மீது தட்டவும்





**2** பொருளை நீக்குவதற்கான வழிகள்

**A**




"Edit" என்பதைத் தட்டவும்.


**B**





நீங்கள் அகற்ற விரும்பும் பொருளை வலமிருந்து இடமாக ஸ்லைடு செய்யவும்.

# உங்கள் பொருட்களை வாங்குதல்


## 1 பொருளைத் தேடவும்




## 2 Add to Cart என்பதைத் தட்டவும்





## 3 பொருளை வண்டியில் சேர்க்கவும்





தயாரிப்பில் மாறுபாடுகள் (ஏதேனும் இருந்தால்) தேர்வு செய்து, வண்டியில் சேர்க்கவும்.

# உங்கள் பொருட்களை வாங்குதல் - PayNow மூலம் "Check Out" செய்தல்

1 வண்டியின் மீது தட்டவும்





2 வாங்குவதற்கு பொருளை (பொருட்களை) தேர்ந்தெடுக்கவும்





பொருளைத் தேர்ந்தெடுக்க தேர்வுப்பெட்டியில் தட்டவும்.

3 Check Out செய்ய தட்டவும்





**உதவிக்குறிப்பு:** நீங்கள் **"Check Out"** செய்வதற்கு முன் **"Shopee பற்றுச்சீட்டு"** மற்றும் **"Shopee நாணயங்கள்"** ஆகியவற்றைப் பயன்படுத்த முடியுமா என்பதைப் பார்க்கவும்.

## 4 Payment Option என்பதைத் தட்டவும்





"Payment Option" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

## 5 கட்டணத்தை உறுதிப்படுத்தவும்





உங்கள் கட்டண விருப்பத்தேர்விற்கு PayNow-ஐத் தட்டவும்.

## 6 QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்





QR குறியீட்டை ஸ்கேன் செய்வதற்கான வழிமுறைகளைப் பின்பற்றவும்.

## 7 QR குறியீட்டைப் பதிவேற்றவும்




QR குறியீட்டின் ஸ்கிரீன்ஷாட்டைச் சேமிக்கவும் அல்லது ஸ்கிரீன்ஷாட் எடுக்கவும், பிறகு உங்களுக்கு விருப்பமான வங்கி செயலியில் PayNow வழியாக QR குறியீட்டைப் பதிவேற்றவும்.

## 8 கட்டண உறுதிப்படுத்தல்





கட்டணம் வெற்றியடைந்ததும், **"Payment Successful"** எனக் குறிப்பிடும் கட்டண உறுதிப்படுத்தம் செயலியில் தோன்றும்.

# Pick Locker-ன் சுய-சேகரிப்பு விருப்பத்தைத் தேர்வு செய்யவும்


நீங்கள் வீட்டில் இல்லாத போது கூடுதல் பாதுகாப்பிற்காக, உங்கள் பார்சல்களை அருகிலுள்ள Pick Locker-ல் டெலிவரி செய்து அவற்றைப் பாதுகாக்கவும். நீங்கள் தேர்ந்தெடுத்த Pick Locker-க்கு பார்சல் டெலிவரி செய்யப்படும் போது, பார்சல் சேகரிப்பு PIN உடன் ஒரு SMS அல்லது மின்னஞ்சலைப் பெறுவீர்கள். குறிப்பிடப்பட்ட சேகரிப்பு தேதி மற்றும் நேரத்தில் PIN-ஐப் பயன்படுத்தி உங்கள் பார்சலை மீட்டெடுக்கவும்.

உங்கள் பார்சலை எவ்வாறு சேகரிப்பது என்பதை அறிந்து கொள்ள, இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:


## 1 ஷிப்பிங் செய்வதற்கான விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்




## 2 சுய-சேகரிப்பு என்பதைத் தட்டவும்





## 3 உங்கள் அருகிலுள்ள Pick Locker-ஐத் தேர்ந்தெடுக்கவும்




# பரிவர்த்தனைகளை கண்காணித்தல்


**1** Me என்ற பிரிவைத் தட்டவும்




**2** My Purchases என்பதைத் தட்டவும்




## 3 நிலையின்படி வாங்கிய பொருட்களை Filter செய்யவும்





- "To Pay" - இதில் கட்டணம் செலுத்தப்படாத அனைத்து பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.
- "To Ship" - இதில் விற்பனையாளர்களால் அனுப்பப்படாத, ஆனால் கட்டணம் செலுத்தப்பட்ட அனைத்து பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.
- "To Receive" - இதில் பெற வேண்டிய அனைத்து பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.
- "Completed" - இதில் பெறப்பட்ட அனைத்து பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.
- "Cancelled" - இதில் ரத்துசெய்யப்பட்ட அனைத்து பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.
- "Replace/ Refund" - இதில் பொருள் திருப்பி அளிக்கப்பட்ட அல்லது தொகை திரும்பப்பெறப்பட்ட அனைத்து பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.

## 4 Shipment Status மீது தட்டவும்




# விற்பனையாளர்களைத் தொடர்பு கொள்ளுதல்


**1** பொருளைத் தேடவும்




**2** பொருளைத் தேர்வு செய்யவும்




**3** பொருட்கள் வாங்கும் பக்கத்திற்குச் செல்லவும்




## 4 Chat என்பதன் மீது தட்டவும்




பொருட்கள் வாங்கும் பக்கத்தில் இருந்து **“Chat”** என்பதைத் தேர்வு செய்யவும்.

## 5 விற்பனையாளருடன் உரையாடவும்




விற்பனையாளருடன் உரையாடவும்.


## 6 விற்பனையாளர்களைத் தொடர்பு கொள்வதற்கான பிற வழிகள்

A




முகப்புப்பக்கத்தில் இருந்து.


B





நீங்கள் கட்டணம் செலுத்தியப் பிறகு அல்லது நிங்கள் வாங்கியவையின் வரலாறு மூலம்.

# கணக்கிலிருந்து வெளியேறுதல்


**1** Me என்ற பிரிவைத் தட்டவும்




**2** அமைப்புகள் மீது தட்டவும்




**3** Logout என்பதன் மீது தட்டவும்





கீழிலிருந்து ஸ்குரோல் செய்து, **“Logout”** என்பதைத் தட்டி, அதனைத் தேர்வு செய்யவும்.


# Shopee பொருளின் நம்பகத்தன்மை சரிபார்ப்பு

## 1 தயாரிப்பின் நம்பகத்தன்மை முத்திரை

A




B




A. ஒரு தயாரிப்பு நம்பகமானதா என்பதை உறுதிப்படுத்த, அது **"மால் (Mall)"** விற்பனையாளரின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளதா என்பதை நீங்கள் பார்க்கலாம். **"மால்"** விற்பனையாளர்கள் தங்கள் தயாரிப்புகளின் சரிபார்க்கப்பட்ட விற்பனையாளர்களாக இருப்பதால், **"மால்"** தயாரிப்புகள் 100% நம்பகமானவை என்று உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

B. தயாரிப்பானது **"மால்"** விற்பனையாளருடையதா என்பதைத் தீர்மானிக்க **"மால்"** லேபிள் இருக்கிறதா எனப் பார்க்கவும்.

# இணையவழி ஷாப்பிங் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான படிப்படியான வழிகாட்டுதல்கள்


Shopee செயலி பக்கம் 17


**FairPrice Group செயலி பக்கம் 45**

# கணக்கை அமைத்தல்

## 1 FairPrice செயலியைத் தொடங்கவும்


Apple App Store அல்லது Google Play Store என்பதிலிருந்து **"FairPrice"** செயலியைப் பதிவிறக்கம் செய்து, அதனைத் தொடங்கவும்.

## 2 கணக்கு என்பதைத் தட்டவும்





மேல் இடது மூலையில் உள்ள சின்னத்தைத் தட்டி, **"Log In or Sign Up"** என்ற பட்டனைத் தட்டவும்.

## 3 உள்நுழையவும் அல்லது பதிவு செய்யவும்




மின்னஞ்சல் முகவரி அல்லது மொபைல் எண்ணை உள்ளிட்டு **"Next"** என்பதைத் தட்டவும். மாற்றாக, Singpass அல்லது Apple அல்லது Google கணக்குகளில் ஒன்றில் கணக்கை உருவாக்கவும்.


## 4 கணக்கை உருவாக்கவும்





செயலியில் உள்ள புலங்களைப் பூர்த்தி செய்து, **"Submit"** என்பதைத் தட்டவும்.

# முகவரியைச் சேர்த்தல்

## 1 Address என்பதைத் தேர்வு செய்யவும்





## 2 Add Address என்பதைத் தட்டவும்




**"Add Address"** என்பதைத் தட்டி, அஞ்சல் குறியீட்டை உள்ளிடவும்.


## 3 விவரங்களைப் பூர்த்தி செய்யவும்





விவரங்களைப் பூர்த்தி செய்து, **"Add Address"** என்பதைத் தட்டவும்.

# பணமளிப்பு முறைகளைச் சேர்த்தல்


**1** Payment Methods என்பதைத் தேர்வு செய்யவும்




**2** Add payment method என்பதைத் தேர்வு செய்யவும்





**3** புதிய கடன் அல்லது பற்று அட்டையைச் சேர்க்கவும்




அட்டையின் விவரங்களைப் பூர்த்தி செய்து, **"Add card"** என்பதைத் தட்டவும்.

# பொருட்களைத் தேடி அவற்றைக் வண்டியில் சேர்க்கவும்


## 1 பொருட்களைத் தேடவும்




முகவரியைச் சேர்த்தல்


தேடல் பட்டியில் பொருளின் பெயரை உள்ளிடவும். செயலியின் பேனர்கள் அல்லது வகைகளின் மூலமும் நீங்கள் தேடலாம்.

## 2 பொருட்களை வண்டியில் சேர்க்கவும்




பொருளை வண்டியில் சேர்க்க அதனைத் தேர்வு செய்யவும். பொருளின் எண்ணிக்கையை அதிகரிக்க அல்லது குறைக்க, "+" அல்லது "-" சின்னத்தைத் தட்டவும்.


## 3 உங்கள் வண்டியை நிர்வகிக்கவும்




வண்டிக்குள், ஒரு பொருளை வேண்டாம் என்று நீங்கள் முடிவு செய்தால் அந்தப் பொருளைத் தேர்வுநீக்குவதன் மூலம் அல்லது அதன் எண்ணிக்கையை அதிகரித்து/குறைத்து உங்கள் ஆர்டரில் மாற்றங்களைச் செய்யலாம்.


# பொருட்களை வாங்குதல்

## 1 Check Out





நீங்கள் வாங்க விரும்பும் பொருட்களை உறுதிசெய்தப் பிறகு, **"Checkout"** என்பதைத் தட்டுவதற்கு முன் இறுதி விலையைச் சரிபார்க்கவும்.

## 2 நேரத்தைத் தேர்வு செய்யவும்





பொருட்களை விநியோகிப்பதற்கு உங்கள் விருப்பமான நேரத்தைத் தேர்வு செய்யவும்.

## 3 பொருட்களை வாங்கவும்




**"Place order"** என்பதைத் தட்டுவதற்கு முன், முகவரி, விலைகள் மற்றும் கட்டணம் போன்ற அனைத்து விவரங்களையும் சரிபார்க்கவும்.


## 4 ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளிடவும்




பரிவர்த்தனையை முடிக்க வங்கி உங்களுக்கு ஒரு முறை கடவுச்சொல்லை (OTP) அனுப்பும். பெட்டியில் OTP ஐ உள்ளிடவும்.


**குறிப்பு:** பாதுகாப்பு காரணங்களுக்காக OTPஐ யாருடனும் பகிர வேண்டாம்.

## 5 வாங்கிய பொருட்கள் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டது




நீங்கள் வாங்கிய பொருட்கள் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டது என்று உங்களுக்குத் தெரிவிக்கும் செய்தியைப் பெறுவீர்கள்.


## 6 வாங்கிய பொருட்களின் விவரங்கள்




**"Track my order"** என்பதைத் தட்டவும், நீங்கள் வாங்கிய பொருட்களின் விவரங்களைக் காண்பீர்கள்.

# நீங்கள் வாங்கியதை ரத்து செய்தல்


## 1 நீங்கள் வாங்கியதை ரத்து செய்யவும்




உங்கள் பொருட்கள் உங்களுக்குத் தேவையில்லை எனில், **"Cancel order"** என்பதைத் தட்டவும்.


**குறிப்பு:** வெவ்வேறு இணையவழி பொருட்கள் வாங்கும் தளங்களுக்கு இடையே பணத்தைத் திரும்பப்பெறும் கொள்கைகள் வேறுபடலாம் என்பதால், அந்தக் கொள்கைகளில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படிப்பது முக்கியம்.

## 2 காரணத்தைத் தேர்வு செய்யவும்




நீங்கள் ரத்து செய்வதற்கான காரணத்தை வழங்குமாறு கேட்கப்படுவீர்கள்.


## 3 உறுதி செய்யவும்




நீங்கள் வாங்கிய பொருட்கள் ரத்து செய்யப்பட்டது என்று உறுதிப்படுத்தும் செய்தியைப் பெறுவீர்கள்.


# செயல்பாட்டைக் கண்காணித்தல்

**1** **Activity என்பதைத் தேர்வு செய்யவும்**




**"Account"** என்பதன் கீழ் **"Activity"** என்பதைத் தேர்வு செய்யவும்.


**2** **செயல்பாடுகளைக் காணவும்**




நீங்கள் பார்க்க விரும்பும் **"Activity"** மீது தட்டவும்.


# உதவிக்கு FairPrice ஐ தொடர்பு கொள்ளுதல்

## 1 Help என்பதன் மீது தட்டவும்





அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் பட்டியலுக்கு கணக்கு என்பதன் கீழ் இருக்கும் **"Help"** என்பதைத் தட்டவும் அல்லது உதவிக்கு நேரடி உரையாடலுக்குச் செல்லவும்.

## 2 நேரடியாக உரையாடவும்




# கணக்கிலிருந்து வெளியேறுதல்

**1** கணக்கு என்பதன் மீது தட்டவும்




**2** Log out என்பதன் மீது தட்டவும்




செயலியைப் பயன்படுத்த விரும்பவில்லை என்றால் **“Log out”** என்பதைத் தட்டவும்.

**கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தைக் கண்டறிய:**

**IMDA தொடர்பு மையம்**

**ஹாட்லைன்:** +65 6377 3800
**கருத்தைத் தெரிவியுங்கள்:**
go.gov.sg/imda-feedback
**இணையத்தளம்:**
digitalforlife.gov.sg

**QR குறியீட்டை ஸ்கேன் செய்து வாழ்நாள் மின்னிலக்கமயத்திற்க்கு செல்லவும்**

© 2026 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆதாரத்தின் எந்தப் பகுதியையும் IMDA வின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது. இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆவணங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம். இவற்றுள் பின்வருபவையும் அடங்கும்: ஆவணங்கள், ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி. காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த வளம் Shopee Pte. Ltd மற்றும் FairPrice குழுவிலிருந்து குறிப்பு எடுக்கிறது.